ஸ்ரீ:

# ஸ்ரீஸ்துதி கீர்த்தனைகள்

ஸ்ரீமான் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிக கேஸரீ |
வேதாந்தாசார்ய வர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதாஹ்ருதி ||

---

இந்த கீர்த்தனைகள் ஸ்ரீ ஸ்வாமி தேசிகனின் ஸ்ரீஸ்துதி ஸ்லோகங்களை ஆதாரமாகக் கொண்டு எழுதப் பெற்றவை. இவற்றுக்கு இசை அமைத்தவர்கள் கர்நாடக இசை வல்லுநர்கள். பல பெண்மணிகள் இவற்றை பாடிவருகின்றனர். இவை அனைவருக்கும் கிடைக்க வேண்டுமென்னும் ஆர்வத்தால், இதை தாழ்மையுடன் ஸமர்ப்பிக்கின்றேன்.

ஸ்ரீனிவாஸ தாஸன்
புதுதில்லி.

PDF created with pdfFactory trial version www.pdffactory.com

ஸ்ரீ:

# ஸ்ரீஸ்துதி கீர்த்தனைகள்

ஸ்ரீமான் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிக கேஸரீ |
வேதாந்தாசார்ய வர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதாஹ்ருதி ||

## ஸ்ரீஸ்துதி --1

ராகம்---பூர்விகல்யாணி தாளம்---ஆதி

பல்லவி

திருவே நின்னைச் சரண் அடைந்தேன்
உறும்கதி வேறறியா நானே (திருவே)

அநுபல்லவி

எல்லை கடந்தது உன்றன் புகழே
இல்லை எனாது இரங்கி அருளிடும் (திருவே)

சரணம்

தொல்லை மதுவைத் தொலைத்த பிரானின்
வல்ல மார்பினை மேவி விளங்கும் (திருவே)
பொங்கும் மங்களப் பொருட்கள் தமக்கு
தங்கும் மங்களத் தன்மையை நல்கிடும் (திருவே)
இம்மை வாழ்விலும் மறுமை உலகிலும்
செம்மையே வேண்டுவோர் நலங்களின் வடிவே (திருவே)

--------

PDF created with pdfFactory trial version www.pdffactory.com

ஸ்ரீ:

# ஸ்ரீஸ்துதி --2

ராகம்---சுருட்டி                                        தாளம்--ஆதி

பல்லவி

யோகியர் மனத்தினில் உறையும் தேவனின்
தேகத்தில் தங்கிடும் தேவியே சரணம்        (யோகியர்)

அநுபல்லவி

உலகின் உயிராம் உத்தமன் நாரணன்
அலகிலா லீலைகள் அமைவதுன் உகப்பே        (யோகியர்)

சரணம்

உயர்வற உயர்நலம் உடையவன் எவனென
மயர்வறக் காட்டிடும் மன்னிய சின்னமாய்
புயத்திடை மார்பிலே பதிந்ததுன் மலரடி
இயல்பாம் சீர்மைநீ இழைத்திட்ட கோலமே        (யோகியர்)

--------

PDF created with pdfFactory trial version www.pdffactory.com

ஸ்ரீ:

# ஸ்ரீஸ்துதி --3

ராகம்---ஹம்ஸத்வநி தாளம்--ஆதி

பல்லவி

கரைகாணா கல்யாண குணக்கடலாம் திருமகளே
அறிவிலா எம்மால் உன்னைத் துதிககவும் இயலுமோ? (கரை)

அநுபல்லவி

திருபாற் கடல்தனில் தோன்றியவள் நீயன்றோ?
ஒருயாக சாலையிலே உற்பவித்தாய் சீதையென (கரை)

சரணம்

உறைவிடமாய்க் கொண்டனைநீ ஒப்பிலாத தாமரையே
திருமாலின் திருமார்பில் திகழ்கின்றாய் அகலாதே
பரந்த பிரபஞ்சமும் பரமபத திருநாடும்
வரையிலா உன்செல்வம் எனவிளங்கும் எந்நாளும் (கரை)

--------

PDF created with pdfFactory trial version www.pdffactory.com

ஸ்ரீ:

# ஸ்ரீஸ்துதி --4

ராகம்---ஆபோகி தாளம்--சதுஸ்ர ஏகம்

### பல்லவி

உன்னால் விஷ்ணுவும் அவனால் நீயும்
எண்ணிநாம் துதித்திடும் இணையாம் பகவதீ (உன்னால்)

### அநுபல்லவி

எந்நாளும் குறைவிலா அன்பினால் பிணைந்தே
எண்ணிலா குணங்களால் ஏற்றமே கொண்டனை (உன்னால்)

### சரணம்

அனந்தனாம் சேஷனும் யோகிகள் மனங்களும்
முனிவர்கள் ஓதிடும் மறைகளின் சிரசுமே
அணையென இருவரும் அகமகிழ்ந் துறைந்திடும்
இணையிலா சிறப்புடை இருப்பிடம் ஆகுமே (உன்னால்)

--------

PDF created with pdfFactory trial version www.pdffactory.com

ஸ்ரீ:

# ஸ்ரீஸ்துதி --5

ராகம்---ஹிந்தோளம் தாளம்--ஆதி

பல்லவி

கடிமலர் மகளே, கனிவுடைத் தாயே,
நெடுமால் தானும் நீயும் இணைவீர் (கடிமலர்)

அநுபல்லவி

அடைக்கல வேள்வியில் ஹவியாம் ஆத்மா
அடைந்திடும் இலக்காய் ஆவீர் எமக்கே (கடிமலர்)

சரணம்

உன்பதி பெருமையும் உன்றனின் புகழையும்
என்றுமே ஓதியும் அருமறை அனைத்துமே
இன்றுமே ஓய்ந்திடாது இருப்பதாய் உரைப்பதால்
என்மனம் களிப்பினால் எழுந்தாடு கின்றதே (கடிமலர்)

--------

PDF created with pdfFactory trial version www.pdffactory.com

ஸ்ரீ:

# ஸ்ரீஸ்துதி --6

ராகம்---கானடா                                        தாளம்--ஆதி

பல்லவி

உலகம் அனைத்தின் ஒப்பிலா இறைவனின்
உளங்கவர் நாயகி உனதடி பணிந்தோம்     (உலகம்)

அநுபல்லவி

முக்குண உலகம் – நீர் விளையாடும் பலகையாம்
மக்களே அதனுள் பகடைப் பதுமைகள்     (உலகம்)

சரணம்

நான்முகன் முதலாம் தேவரும் உங்களின்
மேன்மையாம் சதுரங்க விளையாட்டிலே
நீங்களே நகர்த்திடும் நிலையினைப் பெறுதலைக்
காண்பரே நித்யரும் வேதமும் என்றுமே     (உலகம்)

--------

PDF created with pdfFactory trial version www.pdffactory.com

ஸ்ரீ:

# ஸ்ரீஸ்துதி --7

ராகம்---செஞ்சுருட்டி தாளம்--ஆதி

பல்லவி

திரும்பத் திரும்ப உன் நாமம் செப்புவார்
திரும்பப் பிறவியில் உழலார் --- திருவே (திரும்ப)

அனுபல்லவி

இலக்குமி பத்மா இந்திரா ஜலதி கன்யா
விளங்கும் விஷ்ணுவின் துணைவியே என்றே (திரும்ப)

சரணம்

நான்மறை அனைத்தும் உன் நாமங்கள் தம்மை
மாண்புடன் விளக்குமோர் மாபெரும் களஞ்சியம் !
வானுல களித்திடும் முகுந்தனின் துணைவி நீ
நானிலம் முழுமையின் தெய்வமே ஆகிறாய் (திரும்ப)

---------

PDF created with pdfFactory trial version www.pdffactory.com

ஸ்ரீ:

# ஸ்ரீஸ்துதி --8

ராகம்---சங்கராபரணம் தாளம்--ஆதி

பல்லவி

திருப்பாற் கடலிலே அமுதுடன் தோன்றிய
திருவே! நாரணன் மார்பிலே சேர்ந்தனைநீ (திரு)

அனுபல்லவி

துர்வாச முனிவரின் சாபத்தால் மிக்கவே
வருந்திய தேவர்கள் வணங்கி உனைத் துதிக்கவே (திரு)

சரணம்

அமுதினை அருந்தியே அனைத்து தேவரும்
அமரராய் உன்னையே அடைக்கலம் புகுந்துவுன்
இமைகளின் அசைவினால் இழந்ததம் உலகுகள்
தமையே திரும்பவும் செழிப்புற அடைந்தரே (திரு)

--------

PDF created with pdfFactory trial version www.pdffactory.com

ஸ்ரீ:

# ஸ்ரீஸ்துதி --9

ராகம்---ரேவதி　　　　　　　　　　　　　　　　　　　　　　தாளம்--ஏகம்

பல்லவி

பகவதி நீயே பாரினின் இறைவி என்பார் சிலரே -- நீ
உகக்கும் நாதனே உலகின் நாயகன் என்பார் சிலரே (பகவதி)

அனுபல்லவி

முடிவிலா இவர்களின் வழக்கினால் என்பயன்?
தொடுகிலார் உண்மையை சழக்கிலே மூழ்குவார் (பகவதி)

சரணம்

உகப்பினை நீயுற லீலையைச் செய்திடும்
முகுந்தனைப் புகழ்வதில் முனைந்திடும் மறைகளின்
அகத்தில் நீர் இருவரும் சேர்ந்தே திகழ்வதால்
எமக்கும் அம்மிதுனமே தெய்வமே ஆகுமே (பகவதி)

--------

PDF created with pdfFactory trial version www.pdffactory.com

ஸ்ரீ:

# ஸ்ரீஸ்துதி --10

ராகம்---காபி தாளம்--சதுஸ்ர ஏகம்

பல்லவி

அடியாரின் துயர்நீக்கும் அரும் யாகம் தன்னில்
துடிநிற்கும் பெருமானுடன் துணைநிற்கும் திருவே (அடியார்)

அனுபல்லவி

மனமொன்றி அவனோடு துணைநிற்கும் உன்னை -- அவன்
மனமுவக்கும் ப்ரியையென்று மறைகள் தாம் கூறும் (அடியார்)

சரணம்

நீபிறந்த பாற்கடலின் திரை தூரம் சென்றாலும்
பிரியாது அதன்சுவையே, அதுபோன்று நீயும்
திருமேனி பலவெடுக்கும் திருமாலை அகலாது
உருவெடுத்து விளையாடி உறுகின்றாய் களிப்பே (அடியார்)

--------

PDF created with pdfFactory trial version www.pdffactory.com

ஸ்ரீ:

# ஸ்ரீஸ்துதி --11

ராகம்---ஷண்முகப்ரியா தாளம்--ஆதி

பல்லவி

அமுதம் பிறந்த கடல்தனில் அவதரித்த திருவே (அமுதம்)

அனுபல்லவி

கமலக் கண்ணன் உன்நாதன் கண்களிக்க நீயே
கமலமாம் ஆஸனத்தில் களித்தேறி அமர்ந்தாய் (அமுதம்)

சரணம்

புட்கலா வர்த்த முகில்கள் வானிலே கூடி
புட்பங்களால் பொழிந்தன பெருமழை உன்மீதே
எட்டு திக் கஜங்களும் எழுந்தங்கு ஏந்திய
பொற்குடங் களால் உன்னை புனிதநீ ராட்டினவே (அமுதம்)

--------

PDF created with pdfFactory trial version www.pdffactory.com

ஸ்ரீ:

# ஸ்ரீஸ்துதி –12

ராகம்–––பியாக் தாளம்––ஆதி

பல்லவி

பாற்கடலில் அமுதுடன் பிறந்து மாதவன்
மார்பினில் அமர்ந்த மலர்மகளே திருவே (பாற்)

அனுபல்லவி

கோர சாபம் தீரவே துணைவியர் சேரவே
தேவரும் சரண் அடைந்தனர் உன்னையே (பாற்)

சரணம்

சீர்தரும் உன்றன் திருக்கண் நோக்கினால்
பூரண செழிப்புடன் புத்துயிர் பெற்றன
பார்களில் மூன்றிலும் பல்வகைச் செல்வமே
சேர்ந்திட மீண்டுமே தேவரும் களித்தனர் (பாற்)

--------

PDF created with pdfFactory trial version www.pdffactory.com

ஸ்ரீ:

# ஸ்ரீஸ்துதி –13

ராகம்–––சிவரஞ்சனி                                        தாளம்–பல்லவி

பல்லவி

பகவதி நீயென் தாயே ஆவாய்
பகவான் அடியேன் தந்தையே ஆவான்           (பகவதி)

அனுபல்லவி

இருவராம் உங்கள் திருவருள் தனக்கு
உரியதோர் பாத்திரம் ஆனேன் நானே           (பகவதி)

சரணம்

உன்றன் அருளால் உற்றேன் குருக்களை
அன்றே அவர்கள் அடியனை உம்மிடம்
தந்தனர் அடிமையாய், "நின்னது விருப்பமென்?"
என்றுநீ கேட்கிறாய் புன்னகை மூலமே           (பகவதி)

--------

PDF created with pdfFactory trial version www.pdffactory.com

ஸ்ரீ:

# ஸ்ரீஸ்துதி –14

ராகம்---பிலஹரி　　　　　　　　　　　　தாளம்--ஆதி

பல்லவி

அற்புத திருவே அன்னையே உன்றன்
பொற்பதம் என்மனம் பொலிந்திட வேண்டும்　(அற்புத)

அனுபல்லவி

உற்றபல் நலன்களின் உறைவிடம் நீயே
வற்றிடா கருணையின் வடிவமே நீயே　(அற்புத)

சரணம்

மறைகளின் முடிதிகழ் மணம்நிறை ஆரமாய்
பெருமான் தனக்குப் பெருநிதி ஆவாய்
விரும்பிய தளிக்கும் காம தேனுவே
தருவாய் நின்றன் தரிசனம் என்றுமே　(அற்புத)

--------

PDF created with pdfFactory trial version www.pdffactory.com

ஸ்ரீ:

# ஸ்ரீஸ்துதி –15

ராகம்–––ஆனந்தபைரவி விருத்தம்

வளர்ந்து திரளும் உயர்ந்த பக்தியே
கிளர்ந்த வேங்கடன் கண்ணெழும் இத்துதி
கலியுகக் கலக்கமே கழிந்திட, கமலமே
நிலையிடம் கொண்டதிருவினைப் புகழுமே!
உளத்தில் தரித்திதை உரைப்பவர் தாமே
உலகினில் நிலைத்த வேந்தராய் விளங்குவர்!
எல்லையில் நலமே எங்கிலும் பெருகுமே!

கவிதார்க்கிக ஸிம்ஹாய கல்யாண குணசாலினே |
ஸ்ரீமதே வேங்கடேசாய வேதாந்த குரவே நம: ||

--------

PDF created with pdfFactory trial version www.pdffactory.com